**ADM COURT, SANKARANKOVIL**

**தேதி 12.09.2024**

**அசல் வழக்கு எண். 295/2012**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

என்னுடைய பிராதில் ஆறுமுகம் என்பவர் என்னுடைய சகோதரர் என்றும், கணேசன் என்பவர் என்னுடைய கணவர் என்றும் சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிராதில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்களில் கண்ட கணேசன், ஆறுமுகம் ஆகியோர் மூன்றாம் தரப்பினர்கள்போல் என்று பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விவசாயத்தை பற்றி எனக்கு தெரியும். மிளகாய் பயிர் செடிகளை கிணற்று பாசனம் மூலம் மட்டுமே பயிர் இடமுடியும் என்றால் சரிதான். தொடர்ச்சியான நீர் பாசன வசதிகள் இருந்தால் மட்டுமே மரங்களை வளர்க்க முடியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் 15 வேப்பமரங்கள் உள்ளது என்றால் 7, 8 மரங்கள் உள்ளது. மேற்சொன்ன மரங்கள் 15 ஆண்டுகள் வயது கொண்ட மரங்கள் என்றால் சரியல்ல. 12 ஆண்டுகள் வயது கொண்ட மரங்கள் அந்த மரங்களை நான்தான் கிரையம் வாங்கிய பிறகு நட்டேன். மேற்சொன்ன மரங்களுக்கு எங்கிருந்து தண்ணீர் எடுத்து வளர்த்து வந்தேன் என்றால் மழைநீர் மூலமாக வளர்த்தேன். நான் மூவேந்திரன் என்பவரிடமிருந்து ஆறுமுகம் வழக்கை சொத்தை கிரையம் வாங்கியதற்கான பணப்பற்று ரசீது வாங்கிக்கொண்டார்களா என்றால் வாங்கியருப்பார்கள். ஆறுமுகத்திடமிருந்து நாங்கள் கிரையம் வாங்கியபோது மேற்சொன்ன பணப்பற்று ரசீதை பெற்றுக்கொண்டேனா என்றால் எனது கணவருக்குதான் தெரியும். எனது கணவரையும் மேற்சொன்ன ஆறுமுகத்தையும் விசாரித்தால்தான் வழக்கு சொத்தை கிரையம் பெற்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் மூவேந்திரன் என்பவரால் எழுதிக்கொடுக்கப்பட்ட

ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதியபோது நான் உடன் செல்லவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மூவேந்திரனால் கையெழுத்து போடப்பட்டது என்பதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வா.சா-ஆ.1 ஆவணத்தல் கண்ட கையெழுத்து மற்றும் கைரேகைகள் மூவேந்திரனின் கையெழுத்து மற்றும் கைரேகைகள் அல்ல என்றால் சரியல்ல. எனது கணவரும், எனது சகோதரர் ஆறுமுகமும் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக மோசடியாக வா.சா.ஆ.1 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

2. ஆறுமுகம் என்பவர் மூவேந்திரனிடமிருந்து வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி வாங்கியபோது அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள அசல் பவர் பத்திரத்தை ஆறுமுகம் வாங்கிக் கொண்டாரா என்றால் அதைப்பற்றி எனது கணவருக்குதான் தெரியும். வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக எனது சகோதரரிடமிருந்து எனது கணவர் வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. நானும், எனது கணவரும் எனது சகோதரரும் சேர்ந்து 40 நாட்களுக்குள் வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான 3 பதிவு ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு காரிச்சாத்தான் கிராமத்தில் வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை விற்பனை செய்வதற்காக மூவேந்திரன் என்பவர் எனது கணவர் மூலமாக எங்கள் கிராமத்தில் பேசிவந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் மேற்சொன்ன மூவேந்திரனுக்கு உதவியாக செயல்பட்டார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் பிரதிவாதி மேற்சொன்ன மூவேந்திரனிடமும் எனது கணவரிடமும் அணுகி வழக்கு சொத்தையும், அதன் அருகில் உள்ள சொத்தையும் ரூ.13,50,000/-க்கு கிரையம் பேசினார் என்றால் சரியல்ல. அவ்வாறு மேற்சொன்ன சொத்துக்களை மேற்சொன்ன தொகைக்கு கிரையம் வாங்குவதற்காக பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.1072/1,

1072/2, 1073/1 உள்ள சொத்துக்களை 3ம் நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதேபோல் பிரதிவாதியும், அவருடைய கணவரும் தங்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.39/1D1, 43/11D மற்றும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட தொழிற்சாலை விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு பிரதிவாதி தாங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்து கடந்த 20.09.2009 ல் ரூ.6,50000/-, 30.11.2010 ல் ரூ.3,00,000/-ம் 06.01.2011 ல் ரூ.4,00,000/-ம் சேர்த்து ரூ.13,50,000/-யை எனது கணவர் மூலமாக மூவேந்திரனிடம் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு பிரதிவாதி மூவேந்திரனிடம் பணத்தை செலுத்தியபோது எனது கணவரும் உடன் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு பணம் செலுத்திய காலத்திலேயே வழக்கு சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதேபோல் வழககு சொத்து சம்பந்தப்பட்ட மூல ஆவணங்களை அனைத்தையும் மூவேந்திரனும், எனதுகணவரும் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பணம் செலுத்தியபோது கிரைய ஆவணம் பதிவு செய்ய போதுமான தொகை பிரதிவாதியிடம் இல்லாததால் பதிவு கிரைய ஆவணம் பெற முடியாமல் போய்விட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் மீதும், மூவேந்திரன் மீதும் பிரதிவாதிக்கு இருந்த நம்பிக்கையின்பேரில் பணதததை செலுத்தினார்கள் என்றால் சரியல்ல.

3. அதன்பிறகு 10.08.2012 அன்று மேற்சொன்ன மூவேந்திரனிடமிருந்து பிரதிவாதி வழக்கு சொத்தை பொறுத்து கிரையம் ஆவணம் பதிவுசெய்து பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு கிரையம் ஆவணம் பதிவுசெய்த காலகட்டத்தல் வழக்கு சொத்தின் வழிகாட்டு மதிப்பின்படி கிரைய ஆவணத்தில் வழக்கு சொத்தின் கிரைய தொகையாக ரூ. 7,75,000/- குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு பிரதிவாதி மூவேந்திரனிடம் செலுத்திய பணத்தை மூவேந்திரன் அவருடைய முதல்வர்களிடம்

செலுத்தியதற்கு பணப்பற்று ரசீது பெற்று அதனை பிரதிவாதியிடம் ஒப்படைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 20.09.2009 தேதி முதல் பிரதிவாதி தபசில் சொத்தின் சுவாதீனத்தை அடைந்து தொடர்ந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்திற்கு மேற்கு புறம் உள்ள கிணற்றிலிருந்து தபசில் சொத்திற்கு தண்ணீர் எடுத்து தபசில் சொத்தில் மிளகாய், கம்பு, சோளம் பயிர்களிட்டும், வேப்பமரங்களையும் வளர்த்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது கணவர் தன்னுடைய சொத்திற்கு பாதை வேண்டி பிரதிவாதியிடம் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரையம் கேட்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதி அதற்கு மறுத்துவிட்டு வழக்கு சொத்தை பிரதிவாதி கிரையம் வாங்குவதற்கு எனது கணவர் உதவியாக இருந்ததற்கு அவருக்கு சேரவேண்டிய புரோக்கர் கமிஷன் தொகையை செலுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனது கணவர் மேற்சொன்ன மூவேந்திரனுக்கு 2ம் தார முகவராக செயல்பட்டு வந்ததால் மூவேந்திரனின் புகைப்படம், அடையாள அட்டை எனது கணவரிடம் இருந்து வந்தது என்றால் சரியல்ல. மூவேந்திரனின் புகைப்படம் மற்றும் அடையாள அட்டையை பயன்படுத்தி எனது கணவர்
வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா-ஆ.1 ஆவணத்தை ஊர்ஜிதப்படுத்தவேண்டும் என்பதற்காக நானும், எனது கணவரும், எனது சகோதரரும் சேர்ந்து வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை நாங்கள் பதிவுசெய்ததால் பிரதிவாதி எங்களுக்கு எதிராக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி எங்கள் மீது கொடுத்த புகாரின் பேரில் கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் 29.08.2012 அன்று குற்ற

எண்.250/2012 முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நான் இந்த வழக்கை 17.09.2012 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன குற்ற வழக்கில் நான் ஜாமீன் பெற்று வழக்கை நடத்திவந்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது கணவரும், எனதுசகோரரும் மோசடி செய்யும் வேலை செய்யக்கூடிய நபர்கள் என்றாலும், அவர்களுடன் நானும் சேர்ந்து வா.சா.ஆ.3 ஆவணத்தை மோசடியாக என் பெயரில் உற்பத்தி செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் ரத்து செய்யப்படவேண்டிய ஆவணங்கள் என்றால் சரியல்ல. அதனால் பிரதிவாதி எதிர்கோரிக்கையில் கோரியுள்ள பரிகாரங்கள் பிரதிவாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. அசல் வழககில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**